# கர்ப்ப கால அபாயக் குறிகள்



இக்குறிகள் தோன்றினால் உடனே மருத்துவ உதவியை நாடுங்கள். தாமதித்தால் தாய்க்கும் சேய்க்கும் ஆபத்து நேரிடலாம்.

1. கர்ப்பமாக இருக்கும் போது உதிரப்போக்கு. இது எந்த மாதத்தில் ஏற்பட்டாலும் ஆபத்தானது தான். "பை நிரம்பிப் படுகிறது", "இது எங்கள் குடும்பத்தில் எல்லா பெண் களுக்கும் வழக்கமாக உள்ளது தான்" என்றெல்லாம் நினைத்து சும்மா இருந்து விடாதீர்கள்.

2. வழக்கமாக முதல் மூன்று மாதங்கள் வாந்தி இருக்கும்.



மூன்று மாதங்களுக்கு மேலும் தொடர்ந்து ஓயாத வாந்தி இருத்தல் சரியல்ல.

3. கர்ப்பிணி எழுந்திருக்கவே முடியாமல் நாள் கணக்கில் படுத்திருந்தால், அல்லது மஞ்சள் காமாலையின் அறிகுறிகள் தோன்றினால் உடனே மருத்துவ உதவியை நாடுங்கள்.

இவற்றை அலட்சியப்படுத்த வேண்டாம்!

4.i) இடைவிடாத தலைவலி மண்டை இடி தாங்க முடியாமல் போதல்.

ii) கண்பார்வை மறைத்தல்.

தெளிவு இல்லாமல் காணுதல்.

iii) வலிப்பின் அறிகுறிகள் தோன்றுதல்.



5.i) கர்ப்பிணியின் முகம் படத்தில் உள்ளது போல் உப்பிக் கொண்டு இருக்கிறதா ?

ii) கைகளில் இதுபோல் வீக்கம் உள்ளதா ?

iii) காலையில் எழுந்தவுடன் கால்களில் வீக்கம் தெரிகிறதா ?





இவை மூன்றுமே ஆபத்தானவை. மருத்துவப் பரிசோதனை செய்வது மிகவும் அவசியம்.

6. ஆறு ஏழு மாதங்களில் வயிற்றில் குழந்தை உலாவுவது நன்றாகத் தெரியும். இவ்வாறு உலாவுவது திடீரென்று நின்று போவது சரியல்ல.

7. குழந்தையின் தலை கீழ் நோக்கி இல்லாமல், மேல் நோக்கியோ, குறுக்கு வாட்டிலோ இருப்பதாகத் தெரிந்தால் பிரசவம் கட்டாயமாக மருத்துவமனையில் தான் நடக்கவேண்டும். வீட்டில் பிரசவம் வைத்துக் கொள்ளக்கூடாது.

8. கர்ப்பிணிக்கு திடீரென்று தாங்க முடியாத வயிற்று வலி வருவது ஆபத்து.

9. தொடர்ந்து காய்ச்சலோ, வேறு ஏதும் நோயால் கர்ப்பிணி







பாதிக்கப்பட்டால் மருத்துவ உதவியை நாடுங்கள். தாயின் நோய் சேயை பாதிக்கலாம், அல்லது பிரசவத்தின்போது சிக்கல் ஏற்படுத்தலாம்.

மறவாதீர்கள், கர்ப்பகாலத்தில் மேற்கண்ட குறிகள் தோன்றினால் சிறிதும் காலம் கடத்தாமல் மருத்துவ உதவியை நாடுங்கள்.


**கிராம பெண்கள் சமூக கல்வி மையம் (RUWSEC)**

நேரு நகர், வல்லம் அஞ்சல், செங்கற்பட்டு - 603 002.

காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு,

தொலைபேசி : 04114 - 30682.